
# பொது அறிவுச் சரம்








- புன்னியாமீன் -

தொகுதி 5

# பொது அறிவுச் சரம்

## தொகுதி - 5

பீ.எம். புன்னியாமீன்

வெளியீடு:
வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்' வெளியீட்டாளர்கள்
(தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா
தொலைபேசி 081- 2493746
தொலைநகல் 081- 2497246

'சிந்தனை வட்டத்தின் 230 வது வெளியீடு'

பொது அறிவுச் சரம் (தொகுதி - 5)

ஆசிரியர் : பீ.எம். புன்னியாமீன்
பதிப்பு : முதலாம் பதிப்பு - ஒக்டோபர் 2006
வெளியீடு : சிந்தனை வட்டம்
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
அச்சுப்பதிப்பு : சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
கணனிப் பதிப்பு : எஸ்.எம். ரமீஸ்தீன்
ISBN : 955-8913-56-1
பக்கங்கள் : 40

**Pothu Ariwuch Charam (Vol - 5)**

Subject : Collection of National and International General afiairs (Vol - 5)

Author : P.M. Puniyameen
Printers & Publishers : **Cinthanai Vattam**
CV Publishers (Pvt) Ltd, 14, Udatalawinna Madige,
Udatalawinna 20802, Sri Lanka.
Edition : 1st Edition, October 2006.
Language : Tamil
Type Setting : S.M. Rameesdeen
ISBN : 955-8913-56-1
Pages : 40

**60/=**

**© P.M. Puniyameen 2006**

All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

# போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும், பொது அறிவை வளர்க்க விரும்புவோருக்குமான வழிகாட்டி நூல்

# வாழ்க்கையும் இலக்குகளும்

எமது நாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் வாழ்க்கையில் எவ்வித இலக்குகளுமின்றி வெறுமனே காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இலக்குகள் எதுவும் இல்லாததனால் இவர்கள் தாம் நினைத்தபடி வெற்றுப் பொழுதுபோக்குகளிலும் அரட்டை அடிப்பதிலும் நித்திரையிலும் காலத்தைக் கழிக்கின்றனர். சிலர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதையே பொழுது போக்காகக் கொண்டிருக்கின்றனர்.

ஒருவரின் வாழ்க்கையில் திட்டவட்டமான இலக்குகள் எதுவும் இல்லாவிட்டால் அவரிடம் இயற்கையாக அமைந்துள்ள ஆற்றல்களிலிருந்தும் அவர் பெற்றுள்ள அறிவிலிருந்தும் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ள முடியாமற்போய்விடும். வாழ்க்கையில் இலக்குகள் இல்லாத மனிதன் சுக்கான் இல்லாத கப்பலைப் போல் வீணே அலைக் கழிந்து தோல்வியையும் விரக்தியையும் தழுவிக் கொள்வான். இப்படியானவர்கள் வாழ்வதனால் அவர்களுக்கோ அவர்களது குடும்பத்துக்கோ சமூகத்துக்கோ பெரிய பயனேதும் கிட்டப்போவதில்லை.

இன்று குடும்பங்கள் பிளவுபடுவதற்கும் ஊர்களில் சச்சரவுகள் ஏற்படுவதற்கும் நாட்டில் குழப்பங்கள் நிகழ்வதற்கும் குற்றச் செயல்கள் பெருகுவதற்கும் இவ்வாறு வாழ்க்கையில் இலட்சியமின்றித் தட்டுத் தடுமாறித் திரிபவர்களே பெரிதும் காரணமாக இருக்கின்றனர்.

இவ்வாறானவர்கள் வாழ்க்கையில் முன்னேறாமல் இருப்பதற்குக் காரணம் இவர்களுக்குச் சரியான வாய்ப்புக்கள் கிடைக்காமற் போவதல்ல; மாறாக இவர்கள் வாழ்க்கைக்குத் திட்டவட்டமான இலக்குகளை அமைத்துக்கொண்டு அவற்றுக்காக முயற்சிக்கத் தவறிவிடுவதனாலேயே இந்நிலைமைக்கு ஆளாகின்றனர்.

குடும்பப் பொறுப்புக்கள் இல்லாமை, உழைத்துச் சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமை, தொடர்ச்சியாக உதவிகளும் நன்கொடைகளும் கிடைக்கின்றமை போன்ற காரணிகளும் சமூகத்தில் இப்படியான துர்ப்பாக்கியசாலிகள் பெருகுவதற்குக் காரணமாக இருக்கின்றன. சமூகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளும் இதற்குப் பங்களிப்புச் செய்வதை நாம் மறக்கக்கூடாது.

இலட்சியங்களே இல்லாமல் பயனற்ற வகையில் காலத்தைக் கழிப்பதைக் கைவிட்டு நல்ல இலட்சியங்களை அமைத்துக் கொண்டு வாழ்க்கையைப் பெறுமதிமிக்கதாக ஆக்கிக்கொள்வதன் மூலமே இந்த அவல நிலையிலிருந்து விமோசனம் பெறமுடியும்.



# இலங்கையில் சில முக்கிய தகவல்கள்

- இலங்கையில் தற்போதுள்ள நேர மாற்றம் 2006.04.13ம் திகதி சிங்கள, தமிழ் புத்தாண்டு தினத்தன்று மேற்கொள்ளப்பட்டது. (தற்போது காணப்படுவதே நியம நேர அலகிற்கிணங்கலான நேரமாகும்)
- 2006.06.29ம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கட்சியின் புதிய தலைவராக மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அதிகாரத்தில் உள்ளவரே கட்சியின் தலைவராக இருக்க வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.
- இலங்கையில் பல விருதுகள் பெற்ற முன்னணி திரைப்பட டையரக்டரும், தயாரிப்பாளருமான கலாசூரி கே.ஏ. டப்ளியூ பெரேரா 2006.08.20ம் திகதி காலமானார்.
- இலங்கையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக நோர்வே நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லார்ஸ் ஜொஹன் சோல்பேர்க் நியமிக்கப்பட்டுள்ளார் (2006 செப்டம்பர்). இதற்கு முன்பு ஐரோப்பிய ஒன்றிய நாடான சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் இலங்கையின் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகக் கடமையாற்றினார்.
- 'ஐரோப்பிய சங்கத்தில்' அங்கத்துவம் வகிக்கும் 25 நாடுகள் இலங்கையின் விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கப்பட்டியலில் இணைத்து 2006.05.29ம் திகதி முதல் தடை செய்தது.
- உலக வங்கியின் இலங்கைப் பணிப்பாளராக நாகோ இஸி 2006 ஆகஸ்ட் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். இஸி ஜபான் பிரஜையாவார். 2002 முதல் ஜப்பானின் நிதியமைச்சில் ஜப்பானிய அபிவிருத்திக் கொள்கை மற்றும் பல்பக்க அபிவிருத்தி நிலையம் என்பவற்றின் பொறுப்பாளராகக் கடமையாற்றியுள்ளார். மேலும் 1996ல் இவர் அமெரிக்கா ஹாவர்ட் பல்கலைக்கழக வருகை தரும் கல்விமானாக இருந்து 1997 இல் உலக வங்கியின் இணைப்பதிகாரியாக 2001 வரை கடமையாற்றியுள்ளார். 1992 - 1996 கால கட்டத்தில் சர்வதேச நாணய சபையின் பொருளாதார வல்லுநராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- நாகோ இஸிக்கு முன்பு உலக வங்கியின் இலங்கை பணிப்பாளராக நான்காண்டு காலம் பணியாற்றியவர் பிரித்தானியப் பிரஜையான பீற்றர் ஹெரால்ட் ஆவார்.
- 2006 ஜுன் மாதத்தில் இருதய நோயினால் பாதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயாமாஸ்டருக்கு கொழும்பு அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற அரசு அனுமதியளித்தது.
- 2006ம் ஆண்டு மே மாதம் கொழும்பு இராணுவத் தலைமையகத்தின் முன்பு தற்கொலை குண்டுத்தாரியின் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர்தப்பிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆவார்.
- இலங்கை 2550 வது புத்த ஜயந்தி பிரதான விழாவினை 2006 வெசாக் தினத்தில் கொண்டாடியது.

## உலக அரங்கில் சில முக்கிய தகவல்கள்

- 'லஷ்கர் - இ - கஹார்' எனப்படுவது 2006 ஆண்டில் இந்தியாவில் மும்பையில் எட்டு இடங்களில் தொடர்குண்டு வெடிப்புத் தாக்குதல்களை நடத்தியது எனக் கருதப்படும் தீவிரவாத இயக்கமாகும்.

- எமிரேட்ஷின் சரக்கு விமானச் சேவையானது 2006ம் ஆண்டிற்கான சரக்கு விமான சேவையாக இன்டநெஷனல் ஃபிரேட்டிங் வீக்லி சஞ்சிகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (International Freighting Weekly) இச்சஞ்சிகையினால் எமிரேட்ஸ் தெரிவு செய்யப்படுவது இது 03 வது முறையாகும்.

- 'தாபோதாஸ்' -2 எனப்படுவது வடகொரியா பரிசீலித்துள்ள கண்டம் விட்டு கண்டம் தாவித்தாக்கும் ஏவுகணையாகும். இது நான்காயிரம் கிலோ மீற்றர் தொலைவில் சென்று தாக்குதல் நடத்தக்கூடியது.

- ஈராக்கில் பணியாற்றிவந்த அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனமொன்றின் ஊடகவியலாளர்கள் 41 பேர் குண்டு வெடிப்புக்கு இலக்காகி மரணமடைந்தனர். (2006.05.30)



- பிரபல செனாய் இசைக்கலைஞர் பிஸ்மில்லாகான் 2006 செப்டெம்பர் 20ம் திகதி காலமானார். 'செனாய்' இசையில் அவரது மேன்மைக்காக 'பாரத ரத்னா' விருது வழங்கி இந்திய அரசு அவரை கௌரவித்திருந்தது. அவரின் மறைவுக்காக உத்திரப் பிரதேச அரசு விடுமுறை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

- தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர்களை கௌரவிக்கும் வகையில் 'ஆய்வுமையம்' ஆண்டு தோறும் வழங்கிவரும் 'தொல்காப்பியர்' விருது 2006ம் ஆண்டில் தமிழக முதல்வர் மு. கருனாநிதிக்கு வழங்கப்பட்டது.

- 2002ம் ஆண்டில் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற 'ஜோஸே ராமோஸ் ஹொர்த்தா' 2006-ம் ஆண்டின் இறுதியில் கிழக்குத் தீமோரின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

- 2006-ம் ஆண்டில் பீஜிங்கில் இடம்பெற்ற சீன பகிரங்க டென்னிஸ் போட்டியில் ரஷ்ய வீராங்கனை 'ஸ்வெட்லானா குஸ்நெட்சோவா' சம்பியனானார். இவர் உலகின் மதல்தர டென்னிஸ் வீராங்கனையான பிரான்சின் 'அமலி மௌரஸ்மோவை' தோற்கடித்தே சாம்பின் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

- 2006ம் ஆண்டுக்கான சர்வதேச 'சுபர் பிரேண்ட்' (Super brand) தர விருது பெற்ற தொலைக்காட்சி நிறுவனம் - 'ரூபவாஹினி' ஆகும்.

- 2006-ம் ஆண்டில் இந்தியப் பிரதமர் 'மன்மோகன்சிங்' அவர்களை 'டாக்டர்' பட்டம் வழங்கி பிரித்தானிய 'கேம்பிரிஜ்' பல்கலைக்கழகம் கௌரவித்துள்ளது.

- இந்தியாவில் நடைபெற்ற 53வது 'பிலிம்பேர்' விருது வழங்கும் வைபவத்தில் 'அந்நியன்' படத்தில் நடித்த நடிகர் விக்ரமுக்கு சிறந்த நடிகருக்கான விருதும் 'கஜினி' படத்தில் நடித்த அசினுக்கு சிறந்த நடிகைக்கான விருதும் வழங்கப்பட்டுள்ள அதேவேளை 'அந்நியன்'- 08, 'கஜினி'- 03 விருதுகளையும் ஈட்டியுள்ளது.

@ 2006 அமெரிக்க பகிரங்க டென்னிஸ் மகளிர் பிரிவிற்கான ஒற்றையாட்டத்தில் கிரான்ஸ்லாம் பட்டத்தை வென்ற ரஷ்ய வீராங்கனை

- மரியா ஷரபோவா -

@ 2006 அமெரிக்க பகிரங்க டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் 'கிரான்ஸ்லாம்' பட்டத்தை வென்ற சோடி

- மாட்டினா நவரத்திலோவா -
- பொப் பிரையன் -

@ ''இன் த லைன் ஆப் பையர் - ஓ மெயோர்'' (நெருப்பு கோட்டின் வழியே - ஒரு குறிப்பு) எனும் சுயசரிதைப் புத்தகத்தை எழுதியவர்

- பர்வேஷ் முஷாரப் (பாக்கிஸ்தான் ஜனாதிபதி) -

@ பிரபல அவுஸ்திரேலிய கிரிக்கட் அணியின் சுழல்பந்து வீச்சாளரான ஷேன் வோன் எழுதிய புத்தகம்.

- ஷேன் வோன் இல்லஸ்ரேட் கேரீர் -

@ பிரித்தானியாவின் வோர்ட் போரம்ட கேம்பிரிஜ் CB7 4GG உயர்கல்வியாளருக்கு வழங்கும் பிளேட்டோ விருது 2006 இல் பெற்ற இலங்கையர்

- பேராசிரியர் ஏ.டீ.பி. கலன்சூரிய -
(பேராதனைப் பல்கலைக்கழகம்)

# இலங்கையின் முக்கிய ஆண்டுகள்

@ 1877 - றப்பர் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது
@ 1890 - றப்பர் ஒரு வர்த்தகப் பயிராக மாறியமை
@ 1856 - ஹென்றி வாட் என்பவரால் நீர்ப்பாசன சட்டமூலம் குழுக்களை அமைத்து விவசாய பாரம்பரிய சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை
@ 1873 - வடமத்திய மாகாணத்தில் கிராமியக் குளங்கள் வில்லியம் கிரெகரியால் புனரமைப்பு செய்யப்பட்டமை.
@ 1820 - கொழும்பிலிருந்து கடுகண்ணாவை கணவாயூடாக கண்டி வீதி அமைக்கப்பட்டமை.



@ 1853 - கொழும்பு கண்டி புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமை
@ 1871 - பேராதனை நாவலப்பிட்ட புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமை.
@ 1877 - கொழும்பு, பாணந்துறை, மாத்தளை புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமை.
@ 1899 - நாவலப்பிட்டி-பண்டாரவளை புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமை
@ 1907 - கொழும்பு-புத்தளம், சிலாபம் புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமை
@ 1912 - கொழும்பு-இரத்தினபுரி புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமை
@ 1905 - அநுராதபுரம் - மதவாச்சி புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமை
@ 1955 - பொல்காவலை - அநுராதபுரம், யாழ்ப்பாணம் புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமை.
@ 1905 - மாகோ - திருகோணமலை, மட்டக்களப்பு புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமை.
@ 1931 - சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டமை.
@ 1939 - இலங்கை வங்கி ஸ்தாபிக்கப்பட்டமை.
@ 1942 - முதலாவது பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டமை
@ 1945 - இலவச கல்வி அறிமுகம் செய்யப்பட்டமை.
@ 1948 - இலங்கை சுதந்திரம் அடைந்தமை.
@ 1950 - மத்திய வங்கி ஸ்தாபகம் செய்யப்பட்டமை.
@ 1961 - மக்கள் வங்கி ஸ்தாபகம் செய்யப்பட்டமை.
@ 1972 - தேசிய சேமிப்பு வங்கி ஸ்தாபகம் செய்யப்பட்டமை.
@ 1978 - கிராம எழுச்சி ஆரம்பமாகியமை.
@ 1978 - ஜனாதிபதித்துவ அரசியலமைப்பு உருவானமை.
@ 1978 - தொலைக்காட்சி அறிமுகம் செய்யப்பட்டமை.
@ 1979 - எயர் லங்கா ஸ்தாபிக்கப்பட்டமை.
@ 1979 - உணவு முத்திரைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
@ 1979 - முதலாவது சுதந்திர வலயம் ஏற்படுத்தப்பட்டமை.
@ 1980 - இலவச புத்தக விநியோகம் மேற்கொள்ளப்பட்டமை
@ 1982 - பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட்டமை.
@ 1983 - உயர் கல்வி அமைச்சு நிருவப்பட்டமை.
@ 1987 - இலங்கை - இந்தியா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டமை.

# உலக அதிசயங்கள்

உலக அதிசயங்கள் காலத்துக்குக் காலம் வேறுபடுகின்றன. புராதன காலங்களில் 'அதிசயமாகக்' கருதப்பட்டவை பல இன்று அழிந்துவிட்டன. உலக அதிசயங்களை இனங்காட்டவிளையும் ஆய்வாளர்கள் பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளனர்.

01. புராதன கால அதிசயங்கள்
02. மத்திய கால அதிசயங்கள்
03. நவீன கால அதிசயங்கள்

## புராதன கால அதிசயங்கள்

புராதன காலத்தைச் சேர்ந்தவை என இனங்காட்டப்பட்ட ஏழு உலக அதிசயங்களாவன.

### 01. காபூலில் பிரமிட்

இது எகிப்தில் நைல்நதியின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. பரப்பு 12 ஏக்கர். கி.பி. 1690 இல்தான் இது கட்டப்பட்டது. இதற்குரிய இடத்தை ஒழுங்குபடுத்த மட்டுமே பத்து வருடங்கள் சென்றன. ஒரு இலட்சம் பணியாளர்கள் 20 வருடங்கள் தொடர்ந்து வேலை செய்து மன்னரின் கல்லறைப் பணியினை முடித்தனர். இதன் உயரம் 481 அடி. மன்னரின் சடலம் கெட்டுப் போகாமல் இருக்க பலவித தைலங்கள் சடலத்தில் பூசப்பட்டு பிரமிடின் உள்ளே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இடிபாடுகள் பல ஏற்பட்ட போதிலும் இன்றும் நிலைத்து நிற்கிறது.

### 02. பாபிலேனிய தொங்கும் தோட்டம்
### (The Hanging Garden of Babylon)

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இரண்டாம் நெபுகத் நெஸர் என்ற மன்னரால் கட்டப்பட்டது. அக்காலத்தில் பாபிலோன் மிகப் பெரிய நகரமாக இருந்தது. அடுக்கடுக்கான மாடிகளில் ஊருவாக்கப்பட்டது தான் இந்தப் பூந்தோட்டம். உயரத்தில் உள்ள செடிகளை நனைப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தது. தற்போது முழுமையும் அழிந்து விட்டது.

### 03. ஜூயுஸ் சிலை
### (The Statue of Zeus at Olympia)

சுமார் கி.பி. 463 இல் கிரீக் சிற்பி ஃபீடியாஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. பளிங்கு கற்களால் செய்யப்பட்டுள்ள இந்த சிலை



யானைத் தந்தம் மற்றும் தங்கத்தால் மூடப்பட்டிருந்தது. இதன் உயரம் 40 அடி. கி.பி. 6ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பூகம்பத்தில் கீழே விழுந்ததை யடுத்து இது கொன்ஸ்தான்திநோபிளுக்கு கொண்டு செல்லப்பட்டது. காலச் சுழற்சியில் அழிவுற்றது.

### 04. எபிஸஸ் அர்டிமிஸ் தேவாலயம்
### (Temple of Artemis at Ephesus)

டயானாவின் தேவாலயம் என்றும் இதைக் கூறுவர் கி.பி. நான்காம் நூற்றாண்டில் மாவீரன் அலெக்சாண்டரின் காலத்தில் ஆசியா மைனரில் இதன் வேலைகள் முடிவடைந்தன. பளிங்கு கற்களால் ஆன இது சுமார் 342 அடி நீளமும், 164 அடி அகலமும், 60 அடி உயரமும் உள்ள 127 மிகப் பெரிய தூண்களைக் கொண்டது. கி.பி 262 இல் அழிந்துவிட்டது.

### 05. ஹாலிகர் நஸார் கல்லறை
### (The Mausoleum at Halicarnassus)

ஆசியா மைனரில் ஆர்ட்டி மிஸியா அரசி தன்னுடைய கணவர் கரியயிலே மௌஸோலஸ் மன்னரின் நினைவிற்காக கி.மு. 352 இல் கட்டியது. பளிங்காலான இக்கல்லறை 140 அடி உயரமுள்ளது. வட்ட வடிவுமுடையது. ஒரு பூகம்பத்தால் அழிந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

### 06. ரோட்ஸின் கோளோஸஸ் சிலை
### (The Colossus of Rhodes)

சூரியபகவான் ஹெலியோஸின் பித்தளைச் சிலை. உயரம் 108 அடி. கி.மு. 280 இல் உருவாக்கப்பட்டது. சுமார் 13 வருடங்கள் இதன் வேலைகள் நடைபெற்றன. கி.மு. 224 இல் ஒரு பூகம்பத்தில் இது மறைந்தது.

### 07. அலெக்சாண்டரியா தீப ஸ்தம்பம்
### (The Pharos of Alexandria)

எகிப்தில் அலெக்ஸாண்டரியா துறைமுகத்தின் அருகில் ஃபரோஸ் தீவில் இருந்தது. கி.மு. 247க்கு முன்பு உருவாக்கப்பட்டதாக நம்பப்படு கிறது. இதன் உயரம் 200 அடி. பூகம்பத்தில் முழுவதும் அழிந்துவிட்டது.

## மத்திய காலத்தின் ஏழு அதிசயங்கள்

### 01. ரோமின் கொலோஸியம்
### (Colosseum of Rome)

ரோம மக்களின் வேடிக்கை விளையாட்டுகளுக்காகக் கட்டப்பட்டது. குகைகள், அறைகள் மட்டுமல்லாமல் நிகழ்ச்சியைக் காண வருபவர்களுக்கு இருப்பிட வசதியும் கொண்டிருந்தது. பிரகடனம் நடத்துவதற்குரிய அரங்கமாகவும் இதைப் பயன்படுத்தலாம். தண்ணீர்கொண்டு இவற்றை நிரப்பவும் முடியும். கடலில் போர் நிகழ்ச்சிக்கு முன்னோடியான பயிற்சிக் களமாகவும் குற்றவாளிகளை விலங்குகளுக்கு உணவாக்கவும் இது பயன்படுத்தப்பட்டது.

### 02. அலெக்ஸான்டிரியாவின் குகைகளும், சுரங்கப் பாதைகளும்.
### (The Catacombs of Alexandria)

லிபியன் பாலைவனத்தின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ளது. முன்பு கிருஸ்தவ அகதிகள் இந்தப் பாதையை உபயோகித்து வந்தனர். தற்பொழுது இது முழுமையும் அழிந்துவிட்டது.

### 03. சீனப் பெருஞ்சுவர்கள்
### (The Great Wall of China)

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இதன் வேலைகள் ஆரம்பமாயின. இதன் கட்டுமானப் பணிகள் மிக நீண்டகாலம் நடைபெற்றது. (கி.பி. 14ம் நூற்றாண்டுவரை) இது வடக்கு சீனாவில் சுமார் 1500 மைல் வரை நீண்டு கிடக்கிறது. தற்போது இதை பழுதுபார்க்க பல நாடுகளின் உதவி கோரப்பட்டுள்ளது.

### 04. கற்களால் ஆன வட்டங்கள்
### (Stone Henge)

நியோலிதிக் காலத்தில் இங்கிலாந்தில் சாலீஸ்பரி சமவெளியில் சூரிய பகவானை வழிபடுவதற்காக கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டில் இதன் சரித்திரம் நிர்ணயிக்கப்பட்டபோது மத்திய காலத்தின் அதிசயங்களின் பட்டியலில் இருந்து இது நீக்கப்பட்டது.



### 05. போர்தீலியன் கோபுரம்
### (The Procelain Tower of Nanking)

சீனாவில் நான்கிங் என்ற இடத்தில் இருந்த இந்த கோபுரம் 1853 இல் தெய்விங்க் புரட்சியாளர்களால் அழிக்கப்பட்டது. இது பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதன் உயரம் 260 அடி.

### 06. பைசா நகர கோபுரம்
### (The Leaning Tower of Pisa)

இத்தாலியில் பைசா நகரத்தில் உள்ள இந்த கோபுரப் பணிகள் கி.பி. 1174இல் தொடங்கப்பட்டு 1350 இல் முடிவடைந்தன. இதன் அருகில் உள்ள தேவாலயத்தின் மணிமாளிகையாக இதைக் கட்டினர். இதன் உயரம். 179 அடி. இது எட்டு அடுக்குகளைக் கொண்டது. இந்தக் கோபுரம் சிறிது சிறிதாக சரிந்து கொண்டிருக்கிறது. தற்போது சரியான இருப்பிலிருந்து சுமார் 16 அடி சரிந்து நிற்கிறது.

### 07. கொன்ஸ்தான்தினோபிளின் ஹசியா சோ.ஃபியர்
### (Hazia Sophia / Sancta Sophia - of Costantinopole)

துருக்கியில் உள்ள இந்த கிறிஸ்தவப் பள்ளி கி.பி. 537-54 இல் ஜஸ்ட்டீனியன் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது. 1453 இல் துருக்கிய சுல்தான் இரண்டாம் முஹமது கொன்ஸ்தான்தினோபிளை கைப்பற்றி இதை ஒரு முஸ்லிம் மசூதியாக மாற்றினார். தற்பொழுது இரு ஓர் கலை அருங்காட்சியகமாக உள்ளது.

## தற்காலத்தின் அதிசயங்கள்

உலக அதிசயங்களைத் தேர்ந்தெடுப்பதில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்கள் என்று எதுவும் இல்லை. காலம் காலமாக ஏதாவது ஒரு காரணம் பற்றி இது வழங்கப்பட்டன. இன்றும் இந்த நிலையே தொடர்கிறது.

தற்காலத்தின் உலக அதிசயங்களாக தாஜ்மகால், சீனப் பெருஞ் சுவர், பைசா நகர கோபுரம், ஈ.ஃபில் டவர், ஹசியா சோ.ஃபியா, எம்பயர் ஸ்டேட் பில்டிங், பெட்ரோனாஸ் டவர் போன்றவை கருதப்படுகின்றன. (இப்பட்டியலில் குறித்து கருத்து வேறுபாடுகள் உண்டு).

எவ்வாறாயினும் முன்பு குறிப்பிட்டது போல் உலக அதிசயங்களைக் குறித்த அதிகாரபூர்வ பட்டியல் என்று எதுவும் தனியாக இல்லை. இந் நிலையில் இன்றைய நவீன உலகின் அதிசயங்களாக ஒரு பெரும் பட்டியலே உள்ளது. அவற்றில் ஒரு சில வருமாறு: ஈஸ்டர் தீவுச் சிலைகள் - தென்பசுபிக் தீவு; ஈ.்பில் கோபுரம் - பிரான்ஸ்; மயான் சிட்டி ஆ.்.ப்திகால் - வடக்கு குவாட்டமாலா; ஸ்பேஸ் ஷட்டில் - கொலம்பியா, சார்ட்ரஸ் கதீட்ரல் - பிரான்ஸ்; சானல் குகை மணிக்கூட்டுக் கோபுரம் - இலண்டன்; சி. என். கோபுரம் - கனடா; கேட் வே ஆர்க்- எசயின் லூயிஸ், கோல்டன் கேட் பிரிட்ஜ் - சான் பிரான்சிஸ்கோ; பிரமிட்டுக்கள் - எகிப்து; மவுண்ட் ரஷ்மோரா நேஷனல் மெமோரியல்- அமெரிக்கா; பனாமா மற்றும் சூயஸ் கால்வாய்.... என்று பட்டியல் தொடர்கிறது.

## செய்தி நிறுவனங்கள்

| நிறுவனம் | விரிவாக்கப் பெயர் | தலைமையிடம் |
|---|---|---|
| AA | Anandol Ajansi | அங்காரா |
| AAP | Australian Associated Press | சிட்னி |
| ADN | Allgemeiner Deutscher Nachrichtendientst | பெர்லின் |
| AE | Agence Europe | புருசல்ஸ் |
| AFP | Agence France Presse | பாரிஸ் |
| ANA | Athenagence | எதென்ஸ் |
| ANGOP | Angola Agecia naticiosa N'gola Press | லுவாண்டா |
| ANP | Algemeen Nederlands Persbureau | தி ஹேக் |
| ANSA | Agenzia Nazionale Stampa Associate | ரோம் |
| ANTARA | Indonesian National News Agency | ஜகார்த்தா |
| AP | Associated Press | நியூயோர்க் |
| APP | Agence Parisienne de Presse | பாரிஸ் |
| APP | Associated Press of Pakistan | இஸ்லாமாபாத் |
| AUP | Australian United Press | மெல்போர்ன் |
| BERNAMA | Malaysian National News Agency | கோலாலம்பூர் |
| BSS | Bangladesh Sangbad Sangstha | டாக்கா |
| CANA | Caribbean News Agency | பிரிட்ஜ்டவுன் |
| CNS | China News Service | பீஜிங் |
| CP | Canadian Press | டொரான்டோ |
| DPA | Deutsche Presse Agentur | ஹாம்பர்க் |
| EXTEL | Exchange and Telegraph COmpany | லண்டன் |
| GNA | Ghana News Agency | அகாரா |
| INA | Iraqi News Agency | பக்தாத் |
| IPS | Inter Press Service | ரோம் |
| IRNA | Islami Republic News Agency | டெஹ்ரான் |
| ITIM | Associated Israel Press | டெல்அவிவ் |
| KNA | Kenya Newa Agency | நைரோபி |
| KUNA | Kuwait News Agency | குவைத் |
| KYODO | Dyodo nTsushin | டோக்கியோ |
| MENA | Middle East News Agency | கெய்ரோ |
| NOVOSTI | Agentstvo Pechati Novosti | மொஸ்கோ |
| NPS | Norsk Presse Service | ஒஸ்லோ |
| NZPA | New Zealand Press Agency | வெலிங்டன் |
| PANA | Pan-African News Agency | டாக்கா |
| PNA | Philippines News Agency | மனிலா |
| PPI | Pakistan Press Pinternational | கராச்சி |
| PTI | Press Trust of India | மும்பாய் |
| REUTERS | Reuters | லண்டன் |
| SPA | Saudi Press Agency | ரியாத் |
| TANJUG | Novinska Agencija Tanjug | பெல்கிரேடு |
| TASS | Telegraph Agency of the Sovereign States | மாஸ்கோ |
| UNI | United News of India | புதுடில்லி |
| UPI | United Press International | நியூயார்க் |
| XINHUA | Xinhua | பீஜிங் |
| ZIANA | Zimbabwe Inter-Africa News Agency | ஹராரே |



இலங்கையின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனம் - லங்கா புவத்

## மிருதங்கம் வாசித்து உலக சாதனை

தொடர்ச்சியாக 101 மணிநேரம் வாசித்து கேரளாவைச் சேர்ந்த இளம் வித்துவான் 'குழல் மன்னன்' ராமகிருஷ்ணன் (வயது 35) என்பவர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். இவர் 2005 மே மாதம் கண்ணூரில் நடத்திய இசை நிகழ்ச்சியில் 25ம் திகதி முதல் 29ம் திகதி வரை 101 மணிநேரம் இடைவிடாது தொடர்ந்து மிருதங்கம் வாசித்துள்ளார். உலகளவில் 'மேள வகை' இசை வாத்தியத்தை இதுவரை யாரும் 101 மணிநேரம் தொடர்ந்து வாசித்ததில்லை. இதனால் ராமகிருஷ்ணன் நடத்திய இந்த நிகழ்ச்சி கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

# ஜனாதிபதியும், பிரதமரும் இரட்டைச் சகோதரர்கள்



போலாந்து நாட்டின் ஜனாதிபதி லெஷி கேசிக்ஸ்கி தனது நாட்டின் பிரதமராக தன்னுடன் இரட்டையராகப் பிறந்த சகோதரர் 'ஜெருப்லெப்' ஐ 2006 ஜுலை 10ம் திகதி நியமித்தார். இந்த அடிப்படையில் ஒரு நாட்டில் அதி உயர் அரசியல் பதவிகளை வகிக்கும் இரட்டையர்கள் என்ற வகையில் உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளனர்.

57 வயதான இரட்டைச் சகோதரர்களில் பிரதமர் ஜனாதிபதியை விட 45 நிமிடங்கள் மூத்தவராவார். இருவரும் ஷோர்சோ பல்கலைக்கழகத்தில் சட்டத்துறைப் பட்டப்படிப்பை முடித்தவர்களாவர்.

# அமெரிக்க சனத்தொகை முப்பது கோடி

2006 அக்டோபர் மாத மத்தியில் அமெரிக்காவின் மக்கள் தொகை 30 கோடியை எட்டிப் பிடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 2040 ம் ஆண்டில் இந்த மக்கள் தொகை 40 கோடியை எட்டிப் பிடிக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

அமெரிக்க மக்கள் தொகை அந்நாட்டைப் பொறுத்தவரை, மிகவேகமாக அதிகரித்துச் செல்கிறது. அமெரிக்கா உருவாகி சில நூற்றாண்டுகளே ஆகியுள்ள நிலையில் அதன் மக்கள் தொகை இந்த அளவுக்கு அபரிமிதமான வளர்ச்சி அடைந்ததற்கு பல நாடுகளிலிருந்து அமெரிக்காவில் குடியேற்றம், அமெரிக்க மக்களின் நீண்ட ஆயுட்காலம், குழந்தை பிறப்பு சதவீத அதிகரிப்பு, நிலையான பொருளாதார வளர்ச்சி ஆகியவையே இதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது.



கடந்த 1967ம் ஆண்டு முதல் அமெரிக்காவின் மக்கள் தொகையில் 10 கோடி அதிகரித்துள்ளது. சீனா மற்றும் இந்தியாவுக்கு அடுத்தபடியாக மக்கள் தொகை அதிகம் உள்ள மூன்றாவது நாடு என்ற பெருமையும் அதற்குக் கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் மக்கள் தொகை அதிகரிப்புக்கு குடியேற்றமே முக்கிய காரணமாக உள்ளது. சட்ட ரீதியான குடியேற்றம் மற்றும் சட்ட விரோதமான குடியேற்றம் என இரண்டு வகையிலும் அமெரிக்கா மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. தற்போது கூடுதலாக அதிகரித்துள்ள 10 கோடி அமெரிக்கர்களில் 53 சதவீதம் பேர் இது போல் சமீபத்தில் பிற நாடுகளில் இருந்து குடியேறியவர்களே.

இவர்கள் இல்லாவிடில் அமெரிக்காவின் தற்போதைய மக்கள் தொகை 25 கோடியாகவே இருந்திருக்கும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

# ரஷ்யாவின் சனத்தொகை குறைவடைகிறது

ரஷ்யாவில் மக்கள் தொகை வேகமாக குறைந்து வருகிறது. 1993ம் ஆண்டுக்குப் பிறகு மக்கள் தொகையில் 11 இலட்சம் குறைந்துள்ளது. எனவே, ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளில் வசிக்கும் ரஷ்யர்கள் நாடு திரும்ப வேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரஷ்யாவின் சனத்தொகை 14 கோடியே 30 இலட்சம் ஆகும். 1993 ம் ஆண்டு முதல் மக்கள் தொகை எண்ணிக்கை குறைந்து வருகிறது. இறப்புவிகிதம் அதிகமாக உள்ளது. பிறப்புவிகிதம் குறைவாக உள்ளது.

இந்த நிலை நீடித்தால் இந்த நூற்றாண்டின் மத்தியில் மக்கள் தொகை 10 கோடியாகக் குறைந்து விடும். இது விடயம் குறித்து ஜனாதிபதி புட்டின் கவலை தெரிவித்திருந்தார்.

# சில பொருட்களின் இரசாயனப் பெயர்கள்.

| பொதுப் பெயர் | இரசாயனப் பெயர் |
|---|---|
| பேக்கிங் பவுடர்- | *சோடியம் இருகார்பனேற்று* |
| ப்ளீச்சிங் பவுடர் (வெளிற்றும் தூள்) | *கல்சியம் ஹைப்போகுளோரைட்* |
| கொண்டிஸ் தூள் | *பொட்டாஷியம் பரமங்கனேற்று* |
| காஸ்டிக் சோடா | *சோடியம் ஐதரொட்சைட்* |
| குளோரோ.'.பார்ம் | *ட்ரைக்குளோரோமீதேன்* |
| சாதாரண உப்பு | *சோடியம் குளோரைட்* |
| எப்சம் உப்பு | *மக்னீஷியம் சல்பேற்று* |
| வாஷிங் சோடா (சலவைச் சோடா) | *சோடியம் கார்பனேற்று* |
| ஜிப்சம் | *கல்சியம் சல்பேற்று* |
| ஐதரசன் தண்ணீர் | *ஐதரசன் பெரொக்ஸைட்* |
| ஹைப்போ | *சோடியம் தயோசல்பேட்* |
| சிரிப்பூட்டும் வாயு (லா.'.பிங் காஸ) | *நைட்ரஸ் ஒக்சைட்* |
| சுண்ணாம்பு நீர் | *கல்சியம் ஐதரொட்சைட்டு* |
| சுண்ணாம்புக் கல் | *கல்சியம் கார்பனேற்று* |
| பிளாஸ்டர் பரீஸ் | *கல்சியம் சல்பேற்று* |
| மக்னீசியப் பால் | *மக்னீசியம் ஐதரொட்சைட்டு* |
| வெடி உப்பு | *பாற்றாசியம் நைத்திரேற்று* |
| பல்மாணிக்கம் | *சப்பு சல்பேற்று* |

## சிறிலக்வாஹினி

இலங்கையில் சிறிலக்வாஹினி என்ற பெயரில் புதிய செய்மதி அலைவரிசை ஒன்று ஆரம்பமாகியுள்ளது. (2006 ஜுலை முதல், தொலைக்காட்சி சேவை) இதன் மூலம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகிறது. இலங்கை யிலிருந்து ஆசியா, ரஷ்யா, மத்தியகிழக்கு, ஐரோப்பா, ஆபிரிக்கா முதலிய நாடுகளுக்கும் ஒளிபரப்புச் செய்யப்படுகிறது.

இந்த நாடுகளில் இலங்கை மக்களை இந்த ஒளிபரப்பு அடைவ தற்கு இலக்கு வைத்து நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப் பாகிறது. இதற்கு முன்பு 'T.V. லங்கா' செய்மதி ஒளிபரப்புச் சேவையினை புரிந்து வந்தது தெரிந்ததே.



## உங்கள் பொது அறிவை அளவிட சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. நாக்கு இல்லாத விலங்கு எது?
   1) நத்தை 2) ஆமை 3) முதலை 4) பாம்பு
2. நூறுவீதம் நகரக் குடித்தொகையைக் கொண்ட நாடு எது?
   1) ஹொங்கொங் 2) தாய்வான் 3) மலேசியா 4) சிங்கப்பூர்
3. கரும்பச்சை இளநிறத்தையுடைய முட்டையிடும் பறவை எது?
   1) குயில் 2) காகம் 3) கிளி 4) பருந்து
4. பறவைக் காய்ச்சல் நோயைப் பரப்பும் கிருமி எது?
   1) $H_5N_1$ வைரஸ் 2) ஈசிடீஸ் ஈஜிப்டஸ்
   3) HIV வைரஸ் 4) கொரோனா வைரஸ்
5. அண்மையில் இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதலை நடத்திய போது எந்த தீவ்ரவாத இயக்கத்தை அழிக்க வேண்டுமென்ற காரணத்தைக் காட்டியது?
   1) அல்குவைதா 2) ஹிஸ்புல்லாஹ்
   3) முஜாஹிதீன்கள் 4) லக்-அல்-ஷர்மா
6. எமது இலங்கையில் மிகவும் அண்மைக்காலத்தில் தனது பரிசீலனை ஒளிபரப்பை ஆரம்பித்துள்ள தொலைக்காட்சி
   1) தெரண 2) எம் ஜீ எம் ஆர் 3) டீ என் எல் 4) சக்தி
7. அண்மையில் ஒரு நாடு நீர்மூழ்கிக்கப்பலிலிருந்து நெடுந்தூர ஏவுகணை ஒன்றினைப் பரிசீலித்தது. அது எந்த நாடு?
   1) வடகொரியா 2) லிபியா 3) ஈரான் 4) ஈராக்
8. அண்மையில் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டமொன்றில் பந்தை பழுது படுத்தியமை, கிரிக்கட் ஆட்டத்தை அவமதித்து நடந்து கொண்ட மை என்பதற்காக ஐ.ஸீ.ஸீ யினால் விசாரணைக்குட்பட்ட கிரிக்கட் வீரர்
   1) ரன்ஜன் மடுகல்லை 2) டெரல்ஹெயார்
   3) இன்சமான்-உல்-ஹக 4) அப்துல் ரஸ்ஸாக்
9. 'ஒஸ்லோ' எந்நாட்டின் தலைநகர்?
   1) நோர்வே 2) சுவீடன் 3) பின்லாந்து 4) ஸ்பானியா
10. சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டு எனக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
    1) கலிலியோ கலிலி 2) சேர் ஐசாக் நியூற்றன்
    3) குக்லி மார்க்கோனி 4) அலக்சாண்டர் கிரஹாம்பெல்

11. முதன் முதலில் விண்வெளிக்குச் சென்ற மனிதன் யார்?
1) நீல் ஆம்ஸ்ரோங் 2) மைக்கல்கொலின்
3) யூரி ககாரின் 4) எட்வின் அல்ரின்

12. முதன் முதலில் மனிதனை சந்திரத் தரையில் வெற்றிகரமாக இறக்கிய விண்கலத்தின் பெயர் எது?
1) கொலம்பியா 2) ஸ்கைலாப்
3) லூனா - 9 4) அப்பலோ - 11

13. 1997ல் செவ்வாயில் தரையிறக்கப்பட்ட 'பாத் பைண்டர்' எனும் விண்வெளி ஓடத்தில் விசேடமான ஒளிப்படக்கருவி ஒன்று இணைக்கப்பட்டது. செங்கீழ்க் கதிர்களின் உதவியுடன் படம் பிடிக்கும் இக்கமராவை வடிவமைத்தவர் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு விஞ்ஞானி ஆவார். அவரது பெயர்
1) சரத் குணபால 2) சிரில்பொன்னம்பெரும்
3) சீவீ.இராமன் 4) ஆர்தர் சீ - கிளார்க்

14. இலங்கையின் தேசிய மரம் நாகமரம் ஆகும். ஆங்கிலத்தில் அயன் ட்ரீ (Iron Tree) என அழைக்கப்படும். இம்மரத்தின் தாவரவியற் பெயர் யாது?
1) மெசுவா நாகசாரியம் 2) வலிசுனேரிய
3) ஒரைசா சற்றைவம் 4) பைசம் சற்றைவம்

15. குழந்தைகள் பிறந்து 24 மணி நேரத்துக்குள் அடிக்கப்படும் காசநோய்த் தடுப்பூசி எவ்வாறு அழைக்கப்படும்?
1) பீ.சீ.ஜீ 2) ருபெல்லா 3) முக்கூட்டுவக்சீன் 4) போலியோ

16. இலங்கை உள்ளூராட்சி முறையில் மக்கள் தொகை குறைந்த நகரசபை எது?
1) கம்பளை 2) கடுகண்ணாவை
3) பொகவன்தலாவை 4) புசல்லாவை

17. 'கொண்டலீசா ரைஸ்' என்பவர்
1) ஐக்கிய நாடுகள் சபையின் தொடர்பாளர்
2) அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர்
3) அமெரிக்காவின் வெளிநாட்டு அமைச்சர்
4) பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம்

18. ஸ்ரீலங்கா கிரிக்கட் அணியின் தற்போதைய தலைவர் யார்?
1) மஹேல ஜயவர்தன 2) மாவன் அத்தபத்து
3) சனத் ஜயசூரிய 4) குமார் சங்கக்கார



19. 129 வருட டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் ஒரு நாட்டுக்கெதிராக எந்தவொரு பந்துவீச்சாளரும் 100 விக்கட்டுக்களை கைப்பற்றியிருக்கவில்லை. ஆனால், அண்மையில் தென் ஆபிரிக்காவுக்கெதிரான டெஸ்ட் போட்டியொன்றில் இச்சாதனை நிலைநாட்டப்பட்டது. இவ்வாறு ஒரு நாட்டுக்கு எதிராக நூறு விக்கட்டுக்களை கைப்பற்றிய வீரர்
1) சேன்வோன் 2) சக்லேன் முஷ்தாக்
3) அனில்கும்லி 4) முத்தையா முரளிதரன்

20. பூமி அதிர்ச்சியை அளக்கும் அலகு எது?
1) மெகாவொட் 2) டெசிபல் 3) ரிச்டர் 4) ஹேட்ஸ்

21. மத்திய மாகாண சபையின் தற்போதைய கல்வி அமைச்சர் யார்?
1) சரத் ஏக்கநாயக்க 2) சுசில் பிரேம ஜயந்த
3) சம்பிக்க விஜயரத்ன 4) எதிரிவீர வீரவர்தன

22. இலங்கைப் பாராளுமன்றத்துக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை
1) 225 2) 196 3) 29 4) 198

23. இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் யார்?
1) கெஹெலிய ரம்புக்வெல 2) மஹிந்த ராஜபக்ஷ
3) ரத்னசிரி விக்ரமணாயக்க 4) மங்கள சமரவீர

24. இலங்கையில் கனிய எண்ணெய் மூலம் மின்னை உற்பத்தி செய்யும் நிலையம் அமைந்துள்ள இடம்
1) களனிதிஸ்ஸ 2) ஒருவில 3) எம்பிலிபிட்டிய 4) லக்ஸபான

25. இலங்கையில் அனல் மின்நிலையும் அமைக்கப்பட்டுவரும் இடம்
1) நுரைச்சோலை 2) அம்பாந்தோட்டை
3) கொத்மலை 4) பலாலி

26. குளோனின் முறையால் முதன் முதலில் (1997ல) உருவாக்கபட்ட செம்மறி ஆட்டுக்கு இடப்பட்ட பெயர்
1) டோலி 2) டொங்கி 3) டோட்டி 4) டைரி

27. தற்போதைய உலகக் குத்துச்சண்டை சாம்பியன்
1) மைக் டைசன் 2) ஹாசிம் ரஃமான்
3) மைக்கல் ஸ்பிங்ஸ் 4) ஜேம்ஸ் பஸ்டர் டக்னஸ்

28. சிங்கத்தின் பூர்வீக நாடு எனக் கருதப்படுவது
1) ஸ்ரீலங்கா 2) ஆபிரிக்கா 3) மெக்ஸிகோ 4) அமேசன்

29. 1987 ல் மாகாண சபை முறை ஏற்பட்ட காலம் முதல் மத்திய மாகாண சபையில் முஸ்லிம் கல்வி அமைச்சர் ஒருவர் நியமிக் கப்பட்டு வந்தார். ஆனால் தற்போது இப்படி ஒரு அமைச்சர் பதவி இல்லை. மத்திய மாகாணத்தில் முஸ்லிம் கல்வி அமைச்சர் என்ற பதவியை இல்லாமல் செய்த பிரதமர் யார்?
1) மஹிந்த ராஜபக்ஷ 2) ரணில் விக்ரமசிங்க
3) ரத்னசிறி விக்கரம நாயக்க 4) ரணசிங்க பிரேமதாச

30. பபிளோனிய (சுமேரிய) நாகரிகம் எந்த நதிக்கரையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றது?
1) இந்து நதி 2) நைல்நதி
3) யூப்பிரடீஸ் - டைகிரீஸ் 4) கொங்கோ நதி

விடைகள்

1) முதலை 2) சிங்கப்பூர் 3) காகம்
4) $H_5N_1$ வைரஸ் 5) ஹிஸ்புல்லாஹ்
6) எம்.ஜீ.எம்.ஆர் 7) ஈரான்
8) இன் சமான் - உல் - ஹக் 9) நோர்வே
10) சேர் ஐசாக் நியூற்றன் 11) யூரி ககாரின்
12) அப்பலோ - 11 13) சரத் குணபால
14) மெசுவா நாகரியம் (15) பீ.சீ.ஜி
16) கடுகண்ணாவை 17) அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர்.
18) மஹேல ஜயவர்தனா 19) முத்தையா முரளிதரன்.
20) ரிச்டர் 21) சரத் ஏக்கநாயக்கா 22) 196
23) மஹிந்த ராஜபக்ஷ 24) காண்திஸ்ஸ
25) நுரைச்சோலை 26) டோலி
27) ஹாசிம் ரஹ்மான் 28) ஆபிரிக்கா
29) ரணில் விக்கிரமசிங்க 30) யூப்பரடீஸ் - டைகிரீஸ்



## 500வது ஒருநாள் போட்டியில் உலக சாதனை

2006-07-04ம் திகதி நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் பங்கேற்றதன் மூலம் இலங்கை அணி தனது 500வது சர்வதேச ஒருநாள் போட்டியை நிறைவுசெய்தது. இப்போட்டியில் அதிகூடிய ஓட்டங்கள் சாதனையை முறியடித்து மீண்டும் உலக சாதனையை இலங்கை அணி தனதாக்கிக் கொண்டது.

நெதர்லாந்துக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 443 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதன்மூலமாக தென்னாபிரிக்கா கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பதித்த 438 ஓட்டங்கள் உலக சாதனையை முறியடித்து புதிய சாதனையை (443/9) நிலைநாட்டியது.

இந்த உலக சாதனையை ஏற்கனவே இலங்கை அணி 1996 ஆம் ஆண்டில் கென்யாவுக்கு எதிராக 398 ஓட்டங்கள் பெற்று படைத்தது. சரியாக பத்து வருடங்களின் பின்னர் அச்சாதனையை அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 433 ஓட்டங்களைப் பெற்று முறியடித்தது. இதே போட்டியில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அவுஸ் திரேலியாவின் சாதனையை (இது நடந்து சரியாக மூன்றரை மணித்தியாலங்களுக்குள்) முறியடித்து 438 ஓட்டங்களைப் பெற்று உலக சாதனையை ஏற்படுத்தியது. (இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய அணி 400 ஓட்டங்களைத் தாண்டி வெற்றி பெற்றதும் வரலாற்றிலே முதல் தடவையாகும்.

தற்போது மீண்டும் இந்த சாதனையை 443 ஓட்டங்களாக இலங்கை அணி தன்வசப்படுத்தியுள்ளது. சனத்ஜயசூரிய இப்போட்டியில் பங்கேற்றதன் மூலம் அதிக ஒருநாள் போட்டிகளில் பங்கேற்ற முதல்வீரர் (363) என்ற பெருமையைப் பெற்றார். அத்துடன் ஒருநாள் போட்டியொன்றில் அதிக பௌண்டரிகள் அடித்த வீரர் என்ற சாதனையும் (24) சனத்ஜயசூரியவினால் நிலைநாட்டப்பட்டது.

ஆட்ட நாயகன் விருது சனத் ஜயசூரியவுக்கே வழங்கப்பட்டது. இவர் தனது 22வது சதத்தைப் பூர்த்தி செய்து சதம் பெற்றவர்களின் தரவரிசையில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

அத்துடன் சர்வதேச ஒருநாள்போட்டிகளில் 11000 ஓட்டங்க ளைக் கடந்த மூன்றாவது வீரர் என்ற பெருமையினையும் ஜயசூரிய பெற்றுக்கொண்டார்.

## குவைட்டில் பெண்களுக்கு வாக்குரிமை

குவைட் அரசியல் வரலாற்றில் பெண்களுக்கு வாக்குரிமை அளிப் பதற்கான சட்டம் 2005ம் ஆண்டு மே மாதத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

2006.06.29ம் திகதி இடம்பெற்ற குவைட் பாராளுமன்றத் தேர்தலில் முதற்தடவையாக பெண்கள் வாக்களித்தனர். அத்துடன் 50 ஆசனங்க ளைக் கொண்ட பாராளுமன்றத்துக்குப் போட்டியிட்ட 250 வேட்பாளர்களுள் 28 வேட்பாளர்கள் பெண்களாவர். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகக் கருதப்பட்டது.

ஆனால், தேர்தல் முடிவில் எந்தவொரு பெண் வேட்பாளராலும் வெற்றிபெற முடியவில்லை.

## உலகில் அதிக காலம் சேர்ந்து வாழும் தம்பதிகள்

உலகிலேயே அதிக ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்த தம்பதி என்ற பெருமையை இங்கிலாந்து ஜோடி பெற்றுள்ளது. இவர்கள் 83 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்துள்ளனர். (வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.)

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த தம்பதி பில், எலண்ட் ஜோன்ஸ், திருமணமாகி 83 ஆண்டுகள் 6 மாதங்கள் சேர்ந்து வாழ்ந்து சாதனை படைத்துள்ளனர்.

பில் தாத்தாவுக்கு வயது 105. ஜோன்ஸ் பாட்டிக்கு வயது 102. இவர்களுடைய திருமணப் பதிவு சான்றிதழை சரி பார்த்த பிறகு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இந்த தம்பதியர் இடம்பெற உள்ளனர்.

இதற்கு முன்பு அமெரிக்கா தம்பதி ஜோன் - எலிமியா ரோச்சியா ஆகியோரின் 82 ஆண்டுகள் 167 நாட்கள் மண வாழ்க்கை தான் சாதனையாக இருந்தது.

(தகவல் 2006 - ஜூலை)



## புரூஸ்லியின் வாழ்க்கை திரைப்படமாகிறது.

கராத்தே, குங்பூவில் உலகப்புகழ்பெற்றவர் புரூஸ்லி. இவர் நடித்த படங்கள் பரபரப்பாக ஓடின. ஆனால், திடீரென்று அவர் மறைந்தார். அது பற்றி பல்வேறு வதந்திகள் கிளம்பின. 30 ஆண்டுகளாக வந்த அந்த வதந்திகளுக்கும், கட்டுக்கதைகளுக்கும் அவரது குடும்பத்தினர் பதில் சொல்லவில்லை. இந்த நிலையில் புரூஸ்லியின் வாழ்க்கை வரலாறு சினிமா படமாகிறது. இந்தப் படத்தை புரூஸ்லியின் குடும்பத்தினரும், சீனாவில் பெய்ஜிங் நகரைச் சேர்ந்த ஜியான் யோங்ஜியா பிலிம் நிறுவனத் தினரும் இணைந்து தயாரிக்கிறார்கள். புரூஸ்லி என்ற பெயரிலேயே உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்பு அடுத்த வருடம் ஆரம்பத்தில் தொடங்குகிறது.

புரூஸ்லியின் பாத்திரமேற்று நகைச்சுவை நடிகர் ஸ்டீபன் நடிப்பார் என்று சீன செய்தி இணையத்தளம் தெரிவிக்கிறது. இவர் ஷாலின் சாக்கர் என்ற பிரபல படத்தில் நடித்தவர். ஹொங்கொங்கைச் சேர்ந்தவர். புரூஸ்லியின் வாழ்க்கை வரலாற்றை அவரது சகோதர் லீ சுன்பாய் புத்தகமாக எழுதி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அழிந்து வரும் மொழிகள்

உலகம் முழுவதும் இப்போது 7 ஆயிரம் மொழிகள் வழக்கில் உள்ளன. ஆனால், மாதம் ஒரு மொழி அழிந்து வருகிறது. இது இப்படியே நீடிக்குமானால் அடுத்த 100 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 500 மொழிகள் மட்டுமே இருக்கும். பிரதேச மொழிகள் மீது விதிக்கப்படும் தடை, தொற்று நோய், யுத்தம், இடம்பெயர்தல், கலாசார அழிவு ஆகியவை காரணமாக மொழிகள் அழிவதாக ஐ.நா. சபையின் யுனெஸ்கோ அமைப்பு கூறி உள்ளது. சில நேரங்களில் ஒரு மொழியைப் பேசுபவர்களே தங்கள் மொழியைக் கைவிடுவதால் அந்த மொழி மறைந்துபோய் விடுகிறது என்றும் அந்த அமைப்பு கூறி உள்ளது.

550 மொழிகள் 100 பேருக்கு குறைவானவர்களால் பேசப்படு கிறது. இந்த மொழிகள் தான் விரைவில் அழியப் போகின்றன. 516 மொழிகள் கிட்டத்தட்ட அழிந்து விட்டதாக கருதப்படுகின்றன. இந்த மொழிகளை 50க்கும் குறைவானவர்கள் பேசுவதாலேயே அழிந்து விட்டதாக கருதப்படுகின்றன.

உலகின் 10 பெரிய மொழிகளில் இந்தி, வங்காளி ஆகியவை இடம்பெற்று உள்ளன. மற்ற 8 மொழிகள், மண்டரின் (சீனம்), ஆங்கிலம், ஸ்பானிஷ், ரஷ்யன், அரபி, போர்த்துக்கீசியம், மலாய், இந்தோனேஷியன், பிரஞ்சு ஆகியவையாகும்.

சீன மொழி 100 கோடிக்கும் அதிகமான மக்களால் பேசப்படுகிறது. இந்தி 49 கோடியே 60 இலட்சம் மக்களால் பேசப்படுகிறது. வங்காளி 21 கோடியே 50 இலட்சம் மக்களால் பேசப்படுகிறது. ஆங்கிலம் 51 கோடியே 40 இலட்சம் மக்களால் பேசப்படுகிறது. ஆசியாவில் அதிகமான மொழிகள் வழக்கில் உள்ளன. இந்தியாவில் 427 மொழிகள் பேசப்படுகின்றன. அமெரிக்காவில் 311 மொழிகள் பேசப்படுகின்றன. உலக மொழிகளில் பாதி 8 நாடுகளில் மட்டும் பேசப்படுகின்றன.

## பாடலில் உலக சாதனை

தொடர் ஓட்டப் போட்டியைப் போல சீனாவில் தொடர் பாட்டுப் போட்டி நடத்தி சாதனை நிகழ்த்தியுள்ளனர். 2285 பேர் 118 மணி நேரம் தொடர்ந்து பாடி கின்னஸ் சாதனை நிகழ்த்தியிருப்பதாக சீனா தெரிவித்துள்ளது. சீனாவில் உள்ள ஹுனைன் மாகாணத்தின் தலை நகரான சாங்ஷாவில் ஒரு வணிகவளாகம் இருக்கிறது அங்கு இவர்கள் கூடியதாகவும் ஏற்கனவே நிகழ்த்தப்பட்ட கின்னஸ் சாதனையான 100 மணி நேரத்தை தாண்டி 118 மணி நேரம் பாடி புதிய சாதனையை நிகழ்த்தினார் என ஸின்குவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## மகளிர் தினம்

மறைந்த விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவை நினைவுகூரும் வகையில் அவரது பிறந்த நாளை "மகளிர் தினமாக" கொண்டாட இந்திய மக்கள் தொடர்பு சபை முடிவு செய்துள்ளது. நாசாவைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா 2003ம் ஆண்டு சர்வதேச விண்வெளி மையத்தில் ஆய்வு நடத்தி விட்டு பூமிக்கு திரும்புகையில் கொலம்பியா விண்கலம் பூமியை தொடுவதற்கு சில நிமிடங்கள் இருக்கும்போது எதிர்பாராத விதமாக வெடித்துச் சிதறியது. இதில் இந்தியரான கல்பனா சாவ்லாவும், அவருடன் சென்ற விண்வெளி வீரர்களும் பரிதாபமாக பலியாயினர். கல்பனா சாவ்லாவை நினைவுகூரும் வகையில் அவரது பிறந்த நாளை மகளிர் தினமாக கொண்டாட இந்திய மக்கள் தொடர்பு சபை முடிவு செய்துள்ளது.



# இலங்கையின் புதிய வங்கி 'லங்கா புத்ர'

சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் லங்கா புத்ர (இலங்கை மைந்தன்) என்ற பெயரில் அபிவிருத்தி வங்கி ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு சொந்தமான இந்த வங்கியை கடந்த 27.06.2006 இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார். இந்த அபிவிருத்தி வங்கியை திறப்பதற்கான அனுமதியை மத்திய வங்கி ஏற்கனவே வழங்கி இருந்தது. வங்கியை ஏப்ரல் மாதத்தில் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் ஜுன் மாதத்திலேயே அது கைகூடியது.

முன்னர் இணக்கம் காணப்பட்டதற்கு இணங்க, லங்கா புத்ர வங்கிக்கான ஆரம்ப மூலதனமான 1.5 பில்லியன் ரூபா நிதி திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இன்னும் 2 பில்லியன் ரூபா நிதியினை தனியார் துறை உட்கட்டமைப்பு அபிவிருத்தி கம்பனியிலிருந்து (PS IDC) பெறுவதற்கும் லங்கா புத்ர வங்கி திட்டமிட்டுள்ளது.

## அணுவிசை ஒப்பந்தம்

இந்தியாவும், அமெரிக்காவும் அண்மையில் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அமெரிக்கப் பாராளுமன்றக் குழு கடந்த 27.06.2006 இல் அனுமதியளித்துள்ளது. இந்த ஒப்பந்தம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது எனப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பாராட்டியுள்ளனர். அணுவிசையை ஆக்கபூர்வ பணிகளுக்கே பயன்படுத்துவோம் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

மேலும் இந்தியாவிலுள்ள அணுவிசை மின் திட்டங்களை சர்வதேச அணுவிசை முகவர் நிறுவனம் பார்வையிடவும் அனுமதித்துள்ளது. இதையடுத்து இந்தியாவின் அணுவிசைத் திட்டங்களுக்குத் தேவையான உபகரணங்களையும், தொழில்நுட்பங்களையும் அமெரிக்கா அளிக்க முன்வந்துள்ளது. இது இந்த உடன்பாட்டின் முக்கிய அம்சமாகும்.

# DLF கிண்ணம்

மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் 2006 செப்டெம்பரில் இடம்பெற்ற DLF கிண்ண ஒரு நாள் போட்டித் தொடரே அங்கு இடம் பெற்ற முதல் உத்தியோகபூர்வ ஒரு நாள் போட்டிகளாகும்.

இதற்கு முன்னதாக 1997 ஆம் ஆண்டு மலேஷியாவில் ஐ.சி.சி தொடர் மற்றும் 1998 ஆம் ஆண்டு பொதுநலவாய போட்டிகளின் கிரிக்கட் நிகழ்வுகள் என்பன இடம் பெற்றதாயினும் அவை உத்தியோக பூர்வமானவை அல்ல.

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற முத்தரப்புப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தெரிவான மேற்திந்தியத் தீவுகள் அணியை தோற்கடித்து DLF கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித்தொடரின் சிறப்பாட்டக்காரராகவும், இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் ரிக்கி பொண்டிங் தெரிவு செய்யப்பட்டார்.

# கிரிக்கட் வீரர்களின் சாதனைப் புத்தகங்கள்

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நஸார் ஹூசைன் எழுதிய சுயசரிதை நூலே Playing with Fire என்பதாகும்.

2004 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவர் இப்புத்தகத்தை வெளியிட்டார். 512 பக்கங்கள் கொண்ட இப்புத்தகம் அந்நேரம் வெளியிடப்பட்ட கிரிக்கட்டோடு தொடர்புடையவர்களின் சுயசரிதை புத்தக விற்பனையை முறியடித்து சாதனை படைத்தது.

ஆனாலும் 2005ம் ஆண்டு அவுஸ்திரேலிய முன்னாள் தலைவர் ஸ்டீவ் வோ எழுதி வெளியிட்ட Out of my Comfort Zone என்ற 616 பக்கங்கள் கொண்ட சுயசரிதை நஸார் ஹூசைனின் புத்தக விற்பனையை முறியடித்து புதிய சாதனை படைத்தது.



# இருபது - 20 உலகக் கிண்ணம்

சர்வதேச ஒருநாள் கிரிக்கட் போட்டிகள் பொதுவாக 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களே நடைபெறும். தற்போது சர்வதேச கிரிக்கட் கவுன்ஸில் 20 ஓவர்கள் கொண்ட போட்டியினை ஊக்குவித்து வருகின்றது. இந்த அடிப்படையில் 20 ஓவர்கள் கொண்ட உலகக் கிண்ணப் போட்டித் தொடரொன்றையும் இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

முதலாவது இருபது -20 உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் வாய்ப்பை தென்னாபிரிக்கா பெற்றுள்ளது. இது 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் நடைபெறும். இருபது-20 உலகக் கிண்ணப் போட்டிக்கு 12 நாடுகள் கலந்து கொள்ளவுள்ளன. இந்தப் போட்டிகள் ஒன்பது நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2009 - இருபது 20 உலகக் கிண்ணம் : இங்கிலாந்து

2012 - இருபது 20 உலகக் கிண்ணம் : இலங்கை

2014 - இருபது 20 உலகக் கிண்ணம் : பங்களாதேஷ்

# ஐ. ஸி. ஸி சாம்பியன் கிண்ணம்

2006 - ஐ. ஸி. ஸி சாம்பியன் கிண்ணம் - இந்தியா

2008 - ஐ. ஸி. ஸி சாம்பியன் கிண்ணம் - பாகிஸ்தான்

2010 - ஐ. ஸி. ஸி சாம்பியன் கிண்ணம் - மேற்கிந்தியத் தீவுகள்

2012 - ஐ. ஸி. ஸி சாம்பியன் கிண்ணம் - இலங்கை

2014 - ஐ. ஸி. ஸி சாம்பியன் கிண்ணம் - பங்களாதேஷ்

பெண்கள் உலகக் கிண்ணத்துக்கான போட்டி 2009 இல் அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

# நாட்டியப் பேரொளி - பத்மினி



நாட்டியப் பேரொளி எனத் திரையுலக இரசிகர்களால் அழைக்கப்பட்ட பழம்பெரும் நடிகை பத்மினி 2006 செப்டெம்பர் 25ம் திகதி காலமானார்.

நடிகை பத்மினி கேரளாவில், திருவனந்தபுரம் அருகே உள்ள பூஜாபூரா என்ற இடத்தில் கடந்த 1932 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தனது 17 ஆவது வயதில் 'கல்பனா' என்ற இந்தி படத்தில் கதாநாயகியாக அறிமுகமானார். தமிழ், தெலுங்கு, கன்னடம் உட்பட 250க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

தில்லானா மோகனாம்பாள், திருவருட்செல்வர், குருதட்சணை, மணமகள், ஆதிபராசக்தி, வியட்நாம் வீடு போன்ற படங்கள் பத்மினி நடித்து பெரும் வெற்றி பெற்றவை. பரதநாட்டியம் உட்பட அனைத்து வகையான நடனங்களையும் 4 வயது முதலே முறைப்படி கற்ற பத்மினி தனது நடனத் திறமையால் திரையுலக ரசிகர்களால் 'நாட்டியப் பேரொளி' என அன்புடன் அழைக்கபட்டார். சிவாஜி கணேசன், எம்.. ஜி. ஆர். உட்பட அனைத்து முன்னணி கதாநாயகர்களுடனும் நடித்துள்ளார். இவரது சகோதரிகள் லலிதா, ராகினி ஆகியோரும் நாட்டியத்தில் புகழ் பெற்று விளங்கினர். 1961 ஆம் ஆண்டு நடிகை பத்மினி ராமச்சந்திரன் என்பவரை திருமணம் செய்து கொண்டார். ராமச்சந்திரன் 1981இல் காலமானர். பத்மினிக்கு பிரேம் ஆனந்த் என்ற மகன் உள்ளார். இவர் மாரடைப்பால் இறப்பதற்கு ஒரு நாள் முன்பு தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் பாராட்டு விழாவொன்றில் கலந்து கொண்டமையே இவரது இறுதிப் பொது நிகழ்ச்சியாகும்.



# தங்கம் வென்ற இலங்கை குத்துச்சண்டை வீராங்கனை

**2006ம் ஆண்டில் வியட்னாம் ஹெனோயி நகரில் நடைபெற்ற மகளிர் பிரிவு ஆசிய பகிரங்கக் குத்துச் சண்டைப் போட்டியில் இலங்கை சார்பாகக் கலந்து கொண்ட அனுஷா கொடிதுவக்கு தங்கப் பதக்க மொன்றை பெற்றுள்ளார். மேலும் நில்மினி ஜயசிங்ஹ, சந்திரிக்கா குருகே, எம். சுசந்தி ஆகிய மூவரும் தலா ஒரு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.**

**பதினொரு நாடுகள் கலந்து கொண்ட இப்போட்டியில் இலங்கை யின் சார்பாக ஐந்து பேர் கலந்து கொண்டிருந்தனர். இதில் நான்கு பேர் பதக்கங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தங்கப் பதக்கத்தை வென்ற அனுஷா இந்தியாவைச் சேர்ந்த வீராங்கனை ஒருவரையே தோற்கடித்திருந்தார். கடும் போட்டியின் பின்னர் ஒரே ஒரு புள்ளி வித்தியாசத்திலேயே இலங்கை வீராங்கனை இந்த வெற்றியைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.**

# 'கமி புபுதுவ' கிராமிய திட்டம்

**1988/89ம் ஆண்டு காலப் பிரிவிற்குள் இளைஞர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை என்பவற்றினால் அமைதியின்மையும், குழப்பங்களும் மலிந்து காணப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் HNB வங்கி இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்குடன் GAMIPUBUDUWA என்ற கிராமிய அபிவிருத்தித் திட்டத்தினை ஆரம்பித்தது. 1989 மே மாதத்தில் தொடக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு சுய தொழில் கடன்களை வழங்கியது.**

**கடந்த 17 ஆண்டு காலப் பிரிவினுள் (2006) HNB வங்கி 60,000 சிறு தொகைக் கடன்களை வழங்கியுள்ளது. இதன்மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 500,000 மக்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ஒதுக் கப்பட்ட கடன் தொகை 3.5 பில்லியன் ரூபா.**

# டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் இணைப்பாட்ட சாதனை

மஹேல ஜயவர்தனா தலைமைப் பொறுப்பை ஏற்று தாயகத்தில் விளையாடிய முதலாவது டெஸ்ட் போட்டியில் (2006 - ஆகஸ்ட்) சங்கங்காரவுடன் ஜோடிசேர்ந்து 129 வருட டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் இணைப்பாட்டமாக 627 ஓட்டங்களைப் பெற்றமை புதிய கிரிக்கட் உலக சாதனையாகும்.

### *உலக கிரிக்கட் வரலாற்றில் விக்கட்டுகளுக்கு இடையிலான அதி கூடிய இணைப்பாட்டம்*

| இல | ஓட்டம் | இணைப்பு வீரர்கள் | எதிர் அணிகள் | வருடம் |
|---|---|---|---|---|
| 01. | 627 | மஹேல ஜயவர்தன குமார் சங்கக்கார | இலங்கை எதிர் தென்னாபிரிக்கா | 2006 |
| 02 | 576 | ரொஷான் மகானாம சனத் ஜயசூரிய | இலங்கை எதிர் இந்தியா | 1997 |
| 03. | 413 | பீ. ரோய், மன்கட் | இந்தியா எதிர் நியூஸிலாந்து | 1955/56 |
| 04. | 411 | கொலின் கவுடறி பீ. மே | இங்கிலாந்து எதிர் மே. இ. தீவுகள். | 1957 |
| 05. | 405 | டொன் பிரட்மன் ஜி. பேம்ஸ் | அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து | 1946/47 |
| 06. | 347 | டிபெய்ஸோ டி. எட்கின்சன் | மே. இ. தீவுகள் எதிர் அவுஸ்திரேலியா | 1954/55 |
| 07. | 346 | ஜே. பின்கல்டன் டொன் பிரட்மன் | அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து | 1936/37 |
| 08. | 313 | ஸக்லேன் முஸ்டாக் வசீம் அக்ரம் | பாகிஸ்தான் எதிர் சிம்பாப்வே | 1996/97 |

இதே போட்டியில் ஒரு இனிங்ஸில் ஐந்து விக்கட்டுக்களை இழந்து 764 ஓட்டங்களை இலங்கை அணி பெற்று ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது. உலக டெஸ்ட் வரலாற்றில் இது ஐந்தாவது இடமாகும்.



### *உலக டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் ஒரு இனிங்சில் அணிகள் பெற்ற அதி கூடிய ஓட்டங்கள்*

| இல | ஓட்டம் | எதிர் அணிகள் | வருடம் | இடம் |
|---|---|---|---|---|
| 01 | 952/6 | இலங்கை எதிர் இந்தியா | 1997 | கொழும்பில் |
| 02 | 903/7 | இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா | 1938 | ஓவல், லண்டன் |
| 03 | 849 | இங்கிலாந்து எதிர் மே. இ. தீவுகள் | 1929/30 | கில்ஸ்டனில் |
| 04 | 790/3 | மே. இ. தீவுகள் எதிர் பாகிஸ்தான் | 1958 | கில்ஸ்டனில் |
| 05 | 764/5 | இலங்கை எதிர் தென்னாபிரிக்கா | 2006 | கொழும்பில் |

இப்போட்டியில் மஹேல ஜயவர்தனா தான் எதிர் கொண்ட 572 பந்துகளில் 43 பவுன்ரிகள் 01 ஸிக்ஸர் அடங்களாக 374 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கையைச் சேர்ந்த வீரரொருவர் ஒரு இனிங்சில் பெற்ற அதிகூடிய ஓட்டம் இதுவாகும். அதேநேரத்தில் உலக அரங்கில் மஹேல மூன்றாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

| இல | ஓட்டம் | வீரர்கள் | எதிர் அணிகள் | வருடம் |
|---|---|---|---|---|
| 01 | 400 | பிரேயன் லாரா | மே. இ. தீவுகள் எதிர் இங்கிலாந்து | 2003/04 |
| 02 | 380 | மெதிவ் ஹேடன் | அவுஸ்திரேலியா எதிர் சிம்பாப்வே | 2003/04 |
| 03 | 375 | பிரேயன் லாரா | மே. இ. தீவுகள் எதிர் இங்கிலாந்து | 1993/94 |
| 04 | 374 | மஹேல ஜயவர்தன | இலங்கை எதிர் தென்னாபிரிக்கா | 2006 |
| 05 | 365 | கெரி சோபர்ஸ் | மே. இ. தீவுகள் எதிர் பாகிஸ்தான் | 1957/58 |

தென்னாபிரிக்காவுடனான இவ்வாட்டத்தின் மூலம் முரளி தனது 107 வது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றி மொத்தம் 645 விக்கட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

5 விக்கட்டுக்கள் வீதம் 54 தடவைகளும் 10 விக்கட்டுக்கள் வீதம் 17 தடவைகளும் பெற்று முரளி முன்னணியில் திகழ்கின்றார்.

முரளிக்கு அடுத்ததாக 5 விக்கட்டுகள் வீதம் 36 தடவைகள் நியூஸிலாந்து வீரர் ரிச்சட் ஹெட்லி பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியா வீரர் ஷேன் வோன் 10 விக்கட்டுக்கள் வீதம் 10 தடவைகள் பெற்றுள்ளதோடு 140 டெஸ்ட் போட்டிகளில் 685 டெஸ்ட் விக்கட்டுக்களை பெற்று அதிக டெஸ்ட் விக்கட்டுக்களை கைப்பற்றிய வீரர் வரிசையில் முதலாவதாக உள்ளார்.

## இலங்கை வீரர் கின்னஸ் புத்தகத்தில்

மோட்டார் வாகனமொன்றினை 101 கிலோமீற்றர் 300 மீற்றர்கள் பின்புறமாகச் செலுத்தி உலக சாதனை புரிந்துள்ளவர் புத்திக துசார பண்டார அவர்களாவார். கண்டி, உடதும்பரை மெதிவக்க பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட "புத்திக" 2006 ஜூன் 02ம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்க சுற்றுவட்டப் பாதையிலே இச்சாதனையைப் புரிந்தார். இச்சாதனையை நிகழ்த்த இவருக்கு நான்கு மணித்தியாலங்களும் முப்பத்தைந்து நிமிடங்களும் எடுத்தன.





## கின்னஸ் சாதனை நடிகர்

உலகத்திலேயே தொலைக்காட்சி இரசிகர்களால் அதிக தடவை பார்த்து இரசிக்கப்பட்ட நடிகர் நைட் ரைடர், பே வொட்ச் புகழ் டேவிட் ஹஸ்ஸலோப் என்று கூறப்படுகின்றது.

அதிகமாக தொலைக்காட்சி இரசிகர்களால் பார்த்து இரசிக்கப்பட்டவர் என கின்னஸ் புத்தகத்திலும் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது. நைட் ரைடர் தொடரில் 'மைக்கல் நைட்' என்ற பெயரில் கிட் என்ற பெயருடைய காரின் மூலம் சாகஸங்கள் நிகழ்த்திய டேவிட், 'பே வொட்ச்' தொடரில் தனது உடம்பை சிறப்பான கட்டுடலாக மாற்றி எதிரிகளை பந்தாடினார். இது வரையிலும் நைட் ரைடர் மற்றும் பே வொட்ச் தொடர்கள் எங்கோ ஒரு நாட்டில் ஒளிபரப்பாகிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத் தக்கது. இலங்கையில் கூட ஆரம்பத்தில் ரூபவாஹினியில் ஒளிபரப்பான நைட் ரைடர் இப்போது மீண்டும் சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

## அமெரிக்காவின் அதிஉயர் விருது

அமெரிக்காவில் வழங்கப்படும் உயர்ந்த அந்தஸ்துள்ள விருதான Congressional Gold Medal, தாலாய் லாமாவிற்கு 2006இல் வழங்கப் படவுள்ளது.

இவ்விருதை முன்னதாக சேர் வின்ஸ்டன் சேர்ச்சில், அன்னை தெரேசா, நெல்சன் மண்டேலா ஆகியோர் பெற்றுள்ளனர். தாலாய் லாமாவின் கருணை உணர்வு, சமயத்தின் பால் உள்ள பற்று, வன்முறையற்ற அணுகு முறை மற்றும் மனித உரிமை பண்புகள் என்பவற்றுக்காக அவருக்கு இவ்விருது பரிந்துரைக்கபட்டுள்ளது.

71 வயதாகும் தாலாய் லாமா 1989 ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசையும் பெற்றார். சீனாவின் ஆக்கிரமிப்பில் இருந்த திபேத்தை மீட்டு அம்மக்களுக்கு சுதந்திரம் வாங்கிக்கொடுத்தமைக்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலண்டன் - நியுஹேம் நகரசபையில் சிங்களப் பெண்மணி



2006 மே மாதம் 4ம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் இலண்டன்- நியுஹேம் நகரசபைக்கு 40 வயதுடைய லக்மிணி செவ்வந்தி எனும் சிங்களப் பெண்மணி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட லக்மிணி 1986-ம் ஆண்டில் புலமைப்பரிசில் பெற்று உயர்கல்வி கற்க ரஷ்யா சென்றார். பின்பு பிரித்தானியாவில் ஈஸ்ட்ஹெம் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு உயர்கல்வியைப் பெற்றார்.

1995 இலிருந்து பிரித்தானிய கேஷ் (வாயு) கம்பனியொன்றில் நிதி ஆலோசகராகப் பணியாற்றினார். 2005ம் ஆண்டில் பிரித்தானிய 'தொழில்கட்சி' யில் சேர்ந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். பிரித்தானிய அரசாங்கத்தின் அமைச்சரான STEPHEN TIMMS அவர்களின் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றவர் லக்மிணியாவார். அத்துடன் ஈஸ்ட்ஹேம் மக்கள் சபையில் தலைவியாவார்.

இவரின் கணவர் இந்தியாவைச் சேர்ந்த ASHISH SHA ஒரு இந்து சமயத்தவராவார். இத்தம்பதியினருக்கு மூன்று குழந்தைகள் உளர்.



## அரசியல் - சில முக்கிய குறிப்புகள்

01. புரட்சி மூலம் முடியாட்சியை நீக்கிய நாடு பிரான்ஸ்
02. 'சமாதானம், நிலம், பாண்' என்ற கோஷத்துடன் எழுந்த புரட்சி ரஷ்யப் புரட்சி
03. 'இரத்தம் சிந்தாப் புரட்சி' என அழைக்கப்படுவது 1688ம் ஆண்டு ஆங்கிலப் புரட்சி.
04. 'ஜனநாயம் என்பது எல்லோருக்கும் உரிமை கிடைக்கும் ஆட்சி' எனக் கூறியவர் சீலர்.
05. அமெரிக்க புரட்சிக்கு தலைமை வகித்தவர் ஜோர்ஜ் வஷிங்டன்.
06. ஜனநாயகத்தின் 'இருகண்கள்' சுதந்திரம், சமத்துவம்.
07. ஜனநாயக ஆட்சி முறைகள் ஒற்றையாட்சி, இரட்டையாட்சி.

## சர்வதேச தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள்

| | | |
|---|---|---|
| 01. | ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் | - 1946 |
| 02. | யுனெஸ்கோ நிறுவனம் | - 1946 |
| 03. | அரபு நாடுகள் கூட்டிணைப்பு | - 1961 |
| 04. | உணவு விவசாய நாடுகள் | - 1945 |
| 05. | ஓபெக் | - 1960 |
| 06. | ஆசியான் | - 1967 |
| 07. | ஆசிய அபிவிருத்தி வங்கி | - 1966 |
| 08. | உலக சுகாதார நிறுவனம் | - 1948 |
| 09. | சார்க் | - 1985 |
| 10. | காட் | - 1947 |
| 11. | அணிசேரா இயக்கம் | - 1961 |

# இலங்கையில் உள்ளூராட்சி சபைகள்

அரசுக்கும் கிராம மக்களுக்கும் இணைப்பையும், வளங்களையும் பங்கிட வேண்டிய 1856ம் ஆண்டு நீர்ப்பாசனத்திட்ட பிரேரணைப்படி கிராம சபை ஆரம்பிக்கப்பட்டது. 1924ம் ஆண்டு கம்சபா முறையின் கீழ் வாக்களிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தி அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். 1946ம் ஆண்டு 24 சிறு நகர சபைகள் தாபிக்கப்பட்டன.

1980ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபை அறிமுகப்படுத்தப்பட்டு அபிவிருத்தி சபைக்கான தேர்தல் இடம்பெற்றது. 1987ம் ஆண்டு சட்டவாக் கத்தின் பிரகாரம் ''பிரதேச சபைகள்'' அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் பின்னர் 13வது திருத்த பிரேரணையின் படி உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் இடம்பெற்றது.

@ இலங்கையில் விஸ்திரமான சபைகளும், மக்கள் தொகையும் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| மாநகர சபை | :- | கொழும்பு | 642,143 |
| நகரசபை | :- | மகரகம | 180,112 |
| பிரதேச சபை | :- | பாணந்துரை | 265,000 |

@ இலங்கையில் சிறிய சபைகளும், மக்கள் தொகையும்

| | | | |
|---|---|---|---|
| மாநகர சபை | :- | நுவரெலியா | 25,049 |
| நகரசபை | :- | கடுகண்ணாவை | 1,215 |
| பிரதேச சபை | :- | லக்கலை | 14,202 |

@ 2005 இல் சிறந்த உள்ளூராட்சி சபைகள்

உள்ளூராட்சி சபைகளுக்கிடையில் நடைபெற்ற சிறந்த சபைகளுக்கான விருதை மாநகர சபை மட்டத்தில் குருநாகல் மாநகரசபையும், நகரசபை மட்டத்தில் சீதாவகபுர நகரசபையும், பிரதேச சபை மட்டத்தில் மாத்தறைப் பிரதேசசபையும் சிறந்த சபைகளாக தேர்ந்தெடுக்கப்பட்டன. நிர்வாக கட்டமைப்புக்கள், நிதி முகாமைத்துவம், வளப்பங்கீடு என்பனவே இத்தெரிவுக்குக் காரணமாகும்.

## சம்பளம்

உள்ளூராட்சி சபை தலைவர்கள், அங்கத்தவர்களுக்கு பின்வரும் முறைகளில் சம்பளம் வழங்கப்படுகின்றது. மாநகர, நகர சபைத்தலைவர்களுக்கு 15 ஆயிரம், உப தலைவர்களுக்கு 10 ஆயிரம், அங்கத்தவர்களுக்கு ரூபா 7000 என்ற அடிப்படையிலும் பிரதேசசபை தலைவர்களுக்கு 10 ஆயிரம், உப தலைவருக்கு 6500 ரூபா, அங்கத்தவர்களுக்கு 5000 ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது.



## உள்ளூராட்சி சபைகளின் விபரங்கள்

| மாகாணம் | மாவட்டம் | மக்கள் தொகை | மாநகர சபை | நகர சபை | பிரதேச சபை | மொத்தம் | அங்கத்தவர் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| மேல்மாகாணம் | கொழும்பு | 2,234,289 | 04 | 05 | 04 | 13 | 290 |
| | கம்பஹா | 2,066,096 | 02 | 05 | 12 | 19 | 354 |
| | களுத்துறை | 1,060,800 | - | 04 | 12 | 16 | 235 |
| மத்திய மாகாணம் | கண்டி | 1,276,463 | 01 | 04 | 17 | 22 | 331 |
| | மாத்தளை | 442,427 | 01 | - | 11 | 12 | 137 |
| | நுவரெலியா | 700,083 | 01 | 02 | 05 | 08 | 140 |
| தென்மாகாணம் | காலி | 990,539 | 01 | 02 | 17 | 20 | 244 |
| | மாத்தறை | 761,236 | 01 | 01 | 15 | 17 | 200 |
| | அம்பாந் தோட்டை | 525,370 | - | 02 | 10 | 12 | 138 |
| வடமேல் மாகாணம் | குருணாகல் | 1,452,369 | 01 | 01 | 18 | 20 | 338 |
| | புத்தளம் | 705,342 | - | 02 | 10 | 12 | 161 |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | 746,466 | 01 | - | 18 | 19 | 203 |
| | பொலநறுவை | 359,197 | - | - | 07 | 07 | 91 |
| ஊவா மாகாணம் | பதுளை | 774,555 | 01 | 02 | 14 | 17 | 216 |
| | மொனறாகலை | 396,173 | - | - | 10 | 10 | 104 |
| சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 1,008164 | 01 | 02 | 14 | 17 | 229 |
| | கேகாலை | 779,774 | - | 01 | 11 | 12 | 195 |
| வட, கிழக்கு மாகாணம் | யாழ்ப்பாணம் | 490,621 | 01 | 03 | 13 | 17 | 224 |
| | கிளிநொச்சி | 127,263 | - | - | 03 | 03 | 38 |
| | மன்னார் | 151,577 | - | 01 | 04 | 05 | 46 |
| | வவுனியா | 149,835 | - | 01 | 04 | 05 | 52 |
| | முல்லைத்தீவு | 121,667 | - | - | 04 | 04 | 38 |
| | மட்டக்களப்பு | 486,447 | 01 | 01 | 10 | 12 | 128 |
| | அம்பாறை | 589,334 | 01 | 01 | 16 | 18 | 192 |
| | திருகோணமலை | 340,158 | - | 02 | 11 | 13 | 118 |
| மொத்தம் | | 18,732,255 | 18 | 42 | 270 | 330 | 4442 |

# 2006 ஸ்னூக்கர் செம்பியன்

தேசிய பிளியட், ஸ்னூக்கர் சங்கம் ஆண்டு தோறும் நடத்திவரும் யூ.ட்ப்ளியு. சுமதிபால ஞாபகர்த்த கிண்ணத்துக்காக 57வது தேசிய ஸ்னூக்கர் போட்டியில் 2006ம் ஆண்டுக்கான கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டவர் 'சுசந்த பொதேஜ்'.

# ICC நிறைவேற்றுக்குழு

ICC (சர்வதேச கிரிக்கற் கவுன்ஸில்) நிறைவேற்றுக்குழுவில் டெஸ்ட் அந்தஸ்து பெற்றுள்ள பத்து நாடுகளின் பிரதிநிதிகளும் அசோசியேட் உறுப்பு நாடுகளான இஸ்ரேல், மலேசியா, ஐக்கிய அரபு ராஜ்ஜியம் பிரதிநிதிகளுமாக மொத்தம் 13 பிரதிநிதிகள் இடம்பெறுவர்.

# உலகக் கிண்ண கிரிக்கட் போட்டிகள்

4 ஆண்டுகளுக்கு ஒரு முறை உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. 2007ம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கட் போட்டி மேற்கிந்தியாவில் நடைபெறும்.

2011ம் ஆண்டுக்கான உலகக்கிண்ண கிரிக்கட் போட்டி இந்திய, பாக்கிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து நடத்தும் (ஆசியக் கண்டத்தில் மூன்றாவது தடவை நடைபெறும் போட்டி இதுவாகும். இதற்கு முன்பு 1987, 1996ம் ஆண்டுகளில் நடைபெற்றன.)


2015ம் உலகக் கிண்ணம் - அவுஸ்திரேலியா, நியுஸிலாந்து

2019 உலகக் கிண்ணம் - இங்கிலாந்து

**புகழ் பெற்ற நாமங்கள்**

- இரும்பு மனிதர் - பிஸ்மார்க்
- அங்கில கவிதைகளின் தந்தை - சாகர்
- சிறுகதை மன்னன் - புதுமைப்பித்தன் (விருத்தாச்சலம்)
- நாவலர் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
- Goya of Kalkatha - அன்னை தெரேசா
- கவிக்குயில் - சரோஜினி நாயுடு

‘சிந்தனை வட்டத்தின் 230 வது வெளியீடு’




வரையறுக்கப்பட்ட ‘சிந்தனை வட்டம்’
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா
தொலைபேசி 081- 2493746
தொலைநகல் 081- 2497246

ISBN : 955-8913-56-1